மாகாணக்கல்வித் திணைக்களம்

வடக்கு மாகாணம்

நிலையறி பரீட்சை - 2021

தரம் 05 தமிழ் நேரம் -1.30 மணித்தியாலம்

01. சரியான விடையின் கீழ் கோடிடுக.

01. தமிழ் மொழியிலுள்ள முதல் எழுத்துக்கள் எத்தனை?

1) 30 2)12 3) 216

02. உவகை என்பதன் ஒத்த கருத்துச் சொல் யாது?

1) மகிழ்ச்சி 2) கவலை 3) கோபம்

03. "உழவன் வயலில் நெல் விதைத்தான்" இவ்வாக்கியத்தில் உள்ள செயற்படுபொருள் எது?

1) நெல் 2) உழவன் 3) வயல்

04. பெயராகவும் வினையாகவும் வரும் சொல் எது?

1) கதிரை 2) ஆடு 3) வந்தான்

05. உயர்திணை படர்க்கைப் பன்மை பெயர்ச்சொல் எது?

1) பாம்புகள் 2) விளையாடினார்கள் 3) பிள்ளைகள்

06. "அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்" என்ற பழமொழியின் கருத்து

1) ஒற்றுமையேபலம்

2) விடாமுயற்சிபலன் தரும்

3) அதிக ஆசை அழிவைத்தரும்

07. ஐம்பதாவது ஆண்டின் நிறைவில் எடுக்கப்படும் விழா?

1) வெள்ளிவிழா 2) வைரவிழா 3) பொன்விழா

08. சினைப்பெயர் அல்லாதது

1) பூ 2) மரம் 3) கிளை

09. இருபால் பொதுப் பெயருள் அடங்குவது எது?

1) அரசன் 2) நீதிபதி 3) ஆசிரியன்

www.lkedu.lk

10. ஆந்தை **அலறும்** என்பது போல தேனீ……..

1) ரீங்காரமிடும் 2) இரையும் 3) கீச்சிடும்

11. "நாளை இடியுடன் கூடிய மழை பெய்யும்" இக்கூற்று

1) அறிவித்தல் 2) அறிவுறுத்தல் 3) கட்டளை

12. மான் **கூட்டம்** என்பது போல மயில்…….

1) குழாம் 2) கூட்டம் 3) தோப்பு

13. ஒட்டியவன் ஒருவன் பிரித்தவன் இன்னொருவன். அது என்ன?

1) உதடு 2) கடிதம் 3) கை

14. "க" என்ற எழுத்து இயல்பொலியாக அமையும் சொல் எது?

1) கம்பி 2) காகம் 3) தாகம்

15. ப் + இ இவ்வெழுத்துக்களைச் சேர்த்து எழுதினால் வரும் எழுத்து யாது?

1) பை 2) பீ 3) பி

16. "சிறிய பையன் மைதானத்தில் வேகமாக ஓடினான்" இவ்வாக்கியத்தில் பயனிலை அடைமொழி

1) ஓடினான் 2) மைதானத்தில் 3) வேகமாக

17. ஓர் அடர்ந்த காட்டில்……..வாழ்ந்து வந்தது. இடைவெளியில் வரவேண்டிய சொல் யாது?

1) ஓர் சிங்கம் 2) ஒரு சிங்கம் 3) சிங்கங்கள்

18. திருக்குறளில் உள்ள அதிகாரங்கள் எத்தனை?

1) 130 2) 133 3) 1330

19. ஐம்பூதங்களில் ஒன்று

1) சந்திரன் 2) தீ 3) சூரியன்

20. தமிழ்நாட்டில் வாழ்ந்த பெண் புலவர்

1) அதியமான் 2) ஔவையார் 3) கபிலர் (20x2=40புள்ளிகள்)

www.lkedu.lk

மாகாணக்கல்வித் திணைக்களம்

வடக்கு மாகாணம்

நிலையறி பரீட்சை - 2021

தரம் 05 தமிழ் நேரம் -1.30 மணித்தியாலம்

பகுதி 02

01. ஒத்தகருத்துச் சொல் தருக.

01. அம்புயம் :- ..... 03. மாற்றான் :- .....

02. கங்குல் :- ..... 04. ஈகை :- ..... (2 புள்ளிகள்)

02. எதிர்கருத்துச் சொல் தருக.

01. புதுமை :- .....03. பெருமை :- .....

02. உதயம் :- .....04. நீதி :- .....

(2 புள்ளிகள்)

03. பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.

01. புல் + தரை= .....

02. ஓடம் + ஒன்று = ...

(2 புள்ளிகள்)

04. பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.

01. நானூறு = ...

02. தேநீர் = ...

(2 புள்ளிகள்)

05. இளமைப் பெயர்களை எழுதுக.

01. நெல் = ...

02. எருமை = ...

(2 புள்ளிகள்)

www.lkedu.lk

06. இடைவெளியை நிரப்புக.

பிராணி	ஆண்	பெண்
நாய்		
குதிரை		

(2 புள்ளிகள்)

07. சரியாக எழுதப்பட்ட சொல்லைத் தெரிவு செய்க.

01. சவர்காரம், சவற்காரம், சவர்க்காரம்

02. ஆராய்ச்சி, ஆராட்சி, ஆராய்சி

03. நட்ச்சத்திரம், நட்சத்திரம், நட்சதிரம்

04. சிகைக்காய், சீயாக்காய், சீயக்காய்

(4 புள்ளிகள்)

08. பின்வரும் சுருக்கக் குறியீட்டை விரித்து எழுதுக.

01. இ. ஓ. கூ - .....

02. கி.மு - .....

(2 புள்ளிகள்)

19. பின்வரும் வாக்கியங்களுக்கு நிறுத்தற்குறி இடுக.

01. ஐயா உங்களுடன் கதைக்க வேண்டும் என்று பேசத் தொடங்கினான்

02. ஆகா எவ்வளவு பெரிய கோபுரம்

(3 புள்ளிகள்)

www.lkedu.lk

10. பின்வரும் வாக்கியத்தை எழுத்து வழக்காக மாற்றி எழுதுக.

01. நான் தேத்தண்ணி குடிச்சேன்.

.....

02. விவசாயி வேர்வை சிந்தி உழைத்தான்.

.....

(2 புள்ளிகள்)

11. பின்வரும் ஆண்பால் வாக்கியங்களை பெண்பால் வாக்கியமாக மாற்றி எழுதுக.

01. எனது புத்திரன் கதை கூறினான்.

.....

02. அவரது மருமகன் வெளிநாட்டில் வசிக்கின்றார்.

.....

(2 புள்ளிகள்)

12. கீழே தரப்பட்டுள்ள ஒருமை வாக்கியத்தைப் பன்மை வாக்கியமாக மாற்றி எழுதுக.

01. நான் பாடம் படிக்கின்றேன்.

.....

02. நட்சத்திரம் வானில் மின்னியது.

.....

(2 புள்ளிகள்)

13. மரபுத் தொடர்களின் கருத்தை எழுதுக.

01. கண் திறத்தல் - .....

02. தட்டிக் கொடுத்தல் - .....

(2 புள்ளிகள்)

14. பின்வரும் தொடர்மொழிக்குரிய தனிச் சொல்லை எழுதுக.

01. ஒரு தாய் வயிற்றில் பிறந்தவர்கள் - .....

02. வைத்தியரின்றி தாமே தமது நோய்க்குச் செய்து கொள்ளும் மருந்து.....

(2 புள்ளிகள்)

www.lkedu.lk

15. வெற்றிடத்திற்கு பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க

தாய் தன் குழந்தையை ..... பார்த்துக் கொண்டார்.

(கையும் மெய்யுமாக, கண்ணும் கருத்துமாக,உயர்வும் தாழ்வுமாக)

(1 புள்ளிகள்)

16. பின்வரும் வாக்கியத்தை எதிர்கால வாக்கியமாக மாற்றி எழுதுக.

01. காகங்கள் பறந்து சென்றன.

.....

02. தொழிலாளர்கள் தோட்டத்தில் வேலை செய்கின்றார்கள்.

.....

(2 புள்ளிகள்)

17. கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.

வேலை/ ஓர்/ சேவகன்/ அரசரிடம்/ ஒருவன்/ வந்தான்/ செய்து

.....

(1 புள்ளி)

18. பின்வரும் திருக்குறளில் உள்ள இடைவெளியைப் பூர்த்தி செய்க.

“எந்நன்றி ..... உய்வுண்டாம் உய்வில்லை

செய்ந்நன்றி கொன்ற மகற்கு.”

(1 புள்ளி)

19. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத்தொடர்பு சரியாயின் “சரி” எனவும் பிழையாயின் “பிழை” எனவும் எதிரே உள்ள அடைப்புக் குறிக்குள் எழுதுக.

01. பறவைக்கூட்டம் பறந்து சென்றன. (.....)

02. பேருந்துகள் ஒன்றன் பின் ஒன்றாகச் சென்றன. (.....)

www.lkedu.lk

03. காற்று வேகமாக வீசியதால் மரங்கள் முறிந்துவிழுந்தது. (.....)

04. ஓநாயைக் கண்ட மான் வேகமாக ஓடியது. (.....)

(4 புள்ளிகள்)

20. தரப்பட்டுள்ள குறுக்கெழுத்துப் புதிரைப் பூரணப்படுத்துக.

இடமிருந்து வலம்

01. மயிலின் பெண் மரபுப் பெயர்

02. தலை என்பதன் ஒத்தகருத்து

மேலிருந்து கீழ்

01. அரசன் என்பதன் எதிர்ப்பாற் சொல்

03. கோழியின் இளமைப் பெயர்

01.		03.
02.		

(4 புள்ளிகள்)

21. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

01. ஔவையாருக்கு நெல்லிக்கனி கொடுத்தவர் யார்?

.....

02. "பருத்தித்துறையூராம்" எனும் பாடலைப் பாடியவர் யார்?

.....

03. முத்தமிழ் எவை?

.....

04. துரியோதனன் கர்ணனை எந்த நாட்டினுடைய மன்னனாக்கினான்?

.....

05. நெகிழி என்று அழைக்கப்படுவது எது?

.....

(10 புள்ளிகள்)

www.lkedu.lk

22.ஆரோக்கியமான வாழ்க்கைக்கு உடல் உள சுகாதாரத்தை பேணுவது மிகவும் அவசியமாகும். **"நாம் சுகாதார பழக்கவழக்கங்களைப் பின்பற்றுவதால் ஏற்படும் நன்மைகள்"** எனும் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.

(ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய், பயனிலை, தொடர்புகளும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்.)

01. .....

.....

02. .....

.....

03. .....

.....

(6 புள்ளிகள்)

www.lkedu.lk